www.tamilarangam.net

# ஈழத்தில்

# ஆவணி 77-இனப்படுகொலை

## ஆண்டொன்று ஆகிறது!

அற்ப சலுகை பெற ஆட்சியாளனை
அடிவருடும் அடிமைத் தலைவர்கள்

*ஏ ஈழத் தமிழா!*

உன் உடன்பிறப்புக்கள் படுகொலை செய்யப்பட்டு
உன் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டு
உன் கண்ணெதிரில் தாய், தங்கை, தமக்கையர் கற்பழிக்கப்பட்டு
உன் பச்சைக் குழந்தைகள் கொடூரக் கொலையுண்டு
உன் பரம்பரை மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு

*ஆண்டொன்று ஆகிவிட்டது*

தந்தை செல்வாவின் மரண சாசனத்தை நிறைவேற்ற நாடாளுமன்றப் பிரதிநிதிகளை நீ அனுப்பி

*ஆண்டொன்று ஆகிவிட்டது*

### அந்தக் கறை படிந்த ஆண்டிலே

- முதுபெரும் மூதூரில் மீண்டும் இனக் கலவரம் — அங்கும் அகதியானாய்.
- தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதிகளாகப் படம் போடப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டனர்.
- குற்றமற்ற இளைஞர் சிறையிலே அடைக்கப்பட்டனர்.
- பொலிசு நிலையங்களில் தீப்பிளம்பில் இளைஞர் சித்திரவதை செய்யப்பட்டனர்.
- சிறைக் கோட்டங்களில் சிங்களக் கைதிகளால் தமிழர் படுகொலை செய்யப்பட்டனர்.
- குடியேற்றங்களாலும் முதலாளிகளாலும் தமிழ் மண் பறிக்கப்பட்டுள்ளது.
- விவசாயப் பண்ணைகளில் பொலிசாரின் வெறித் தாக்குதலுக்குத் தமிழ் இளைஞர் பலியாகியுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- ★ கல்லோயா வழியிலே மதுறுஓயாக் கொலைக்களம் தந்தார் தேவர்.
- ★ தமிழனைக் கொன்ற படைவீரனுக்கு பிணையில் விடுதலை.
- ★ தமிழனுக்கு அடைக்கலம் கொடுத்தவனுக்கோ கொடுஞ்சிறை.

## உன் நாடாளுமன்றப் பிரதிநிதியோ –

- ★ தன் மகனுக்கே அதிகாரிப் பதவி எடுத்துக் கொடுத்துள்ளார்.
- ★ அரசினைக் கட்டி அணைக்க இரவு விருந்துகளில் திட்டம் தீட்டுகிறார்.
- ★ தட்டிக் கேட்கும் இளைஞரைக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பனாகிறார்.
- ★ "ஜீப்" வண்டியில் ஒய்யாரப் பவனி வருகிறார்.
- ★ மாநாடு என்று சொல்லி உலகஞ் சுற்றிப் பறக்கிறார்.
- ★ நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கிறோம் என்று கூறி 100 ரூபா காசுக்காக ஒரு நிமிடம் ஒழித்தொழித்துக் கதிரையிலே உட்கார்ந்து எழும்புகிறார்.
- ★ பட்டினி கிடக்கும் தொண்டன் தலைவரோ ஜெனீவா பறக்கிறார்.

ஈழத் தமிழ் மண்ணில் இரத்த ஆறு ஓடி
ஆண்டொன்று ஆகிவிட்டது.
ஆனால் நீயோ
உயிர்ப்பலி கொடுத்து
உன் உடன்பிறப்பின்
ஆட்டத்திவச நாளில்
உன் தலைவருக்குப்
பிறந்த நாள் கொண்டாடுகிறாய்
நீ கேட்பது — தமிழ் ஈழம்
உனக்குக் கிடைத்தது — "பேர்த்டே கேக்"
(BIRTHDAY CAKE)
இவர்களா உனக்கு வழிகாட்டி?

—எழுவான்கரையான்

அம்பாறை றோட், களுவாஞ்சிக்குடி "எழுவான் கரையான்" என்பவரால் கொழும்பு 13, சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்